ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2032/38 - 2017 අගෝස්තු මස 18 වැනි සිකුරාදා - 2017.08.18
*2032/38 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது இலக்கம்.: 3/කටා/ඉ. අත්/91.*
*காணி அமைச்சின் இலக்கம்: 4-3/2/2015/AV/205*

*ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.*

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

*மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கட்டான பிரதேச செயலாளர் பிரிவில், கிம்புலபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, கம்பஹா மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 511211 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு இல. 272 எனக் காட்டப்பட்ட 0.3284 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய தெல்கஹவத்தை அல்லது மில்லகஹவத்தை எனும் காணித் துண்டு.*

*01. **துண்டு இல. 272***
*காணியின் பெயர்: தெல்கஹவத்தை அல்லது மில்லகஹவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், சுமார் 15-25 வருட வயதிலான 38 தென்னை மரங்கள் காணப்படுகின்றன; உரிமை கோருபவர்: என். டபிள்யூ. கமலா ரஞ்சனீ, இல. 73, “இரங்க” தலாதூவ வீதி, நீர் கொழும்பு; விஸ்தீரணம்: 0.3284 ஹெக்டயார்.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கட்டான பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

*கே. ஜீ. எச். எச். ஆர். கிறிஎல்ல,*
*பிரதேச செயலாளர்,*
*கட்டான.*

*பிரதேச செயலகம்,*
*கட்டான,*
*2017, ஓகத்து 17.*

*8 - 1124*

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*2017.01.10 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இல. 2001/5 ஐக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட குருநாகல் மாவட்டத்தில் பொல்கஹவலை பிரதேச செயலகப் பிரிவில் தொரதெனிய, ஹேனேபொல, தெவடேகெதர மற்றும் கெசெல்வத்தேஹேன கிராமங்களில் அமைந்துள்ள இ.கி.வ. 2332 இல் கேயூ/பிஎல்ஜீ/2016/512 ஆம் இலக்கத்தின் கீழுள்ள துண்டு இல. 1, கீழ் குறிப்பிடப்படுகின்றவாறு திருத்தப்படுதல் வேண்டும்.*

**துண்டு இல. 114**

*காணியின் பெயர்: வதுரன்கந்த; விபரம்: அடர்ந்த காட்டுடன் கூடிய தோட்டம் மற்றும் கல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஏ. எம். தேவிகா அதபத்து, ஏ. எம். என். கே. அதபத்து, ஏ. எம். டீ. தீபானி அதபத்து, ஏ. ஏ. புஷ்பா தமயந்தி, ஏ. எம். திஸ்ஸ குமார, ஏ. எம். பிரதீப் சஞ்சீவ அதபத்து, என். எம். பொடிமெனிகே, ஏ. எம். தக்ஷிலா ஷிரானி அதபத்து உட்பட மற்றும் சிலர்; விஸ்தீரணம்: 0.4742 ஹெக்டயார்.*

**துண்டு இல. 115**

*காணியின் பெயர்: வதுரன்கந்த; விபரம்: கல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஏ.எம்.என்.கே. அதபத்து மற்றும் ஏ.எம்.டீ. தீபானி அதபத்து; விஸ்தீரணம்: 0.1691 ஹெக்டயார்.*

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவலை.

பிரதேச செயலகம்,
பொல்கஹவலை.

8 – 1125

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*2016.10.07 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இல. 1987/48 ஐக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட குருநாகல் மாவட்டத்தில் பொல்கஹவலை பிரதேச செயலகப் பிரிவில் தபேகொட மற்றும் மெதகலுகொமுவ கிராமங்களில் அமைந்துள்ள மு.கி.வ.கு 2335 இல் பிற்சேர்க்கை இல. 1, தாள் இல. 1 இல் கேயூ/பிஎல்ஜீ/2016/513 ஆம் இலக்கத்தின் கீழுள்ள துண்டு இல. 36 மற்றும் 37 இன் கீழ் குறிப்பிடப்படுகின்றவாறு திருத்தப்படுதல் வேண்டும்.*

**துண்டு இல. 57**

*காணியின் பெயர்: மஹகமவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ரத்நாயக்க முதியன்சேலாகே பிரேமாவதீ; விஸ்தீரணம்: 0.0778 ஹெக்டயார்.*

**துண்டு இல. 58**

*காணியின் பெயர்: மஹகமவத்த; விபரம்: கல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: சில்பாதி பதியலாகே சியனேரிஸ்; விஸ்தீரணம்: 0.0290 ஹெக்டயார்.*

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவலை.

பிரதேச செயலகம்,
பொல்கஹவலை.

8 – 1126

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.